**கவனிக்க** .- 2026.01.02 ஆந் திகதிய 2470 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழிமூலம் ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2471- 2026 ජනවාරි මස 09 වැනි සිකුරාදා - 2026.01.09

2471ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (II ஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 56 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 57 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள் | 62 |
| அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, சனவரி மாதம் 30ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, சனவரி மாதம் 16ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ்.டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


55 - B 82753- 417(2026/01)

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு**

**இலங்கை நில அளவைத் திணைக்களம்**

**பாவனையில் இருந்து ஒதுக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக் கோரல்**

**1. இலங்கை நில அளவைத் திணைக்களமானது அதற்குச் சொந்தமான பாவனையில் இருந்து ஒதுக்கப்பட்ட பின்வரும் பொருட்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக்களைக் கோருகின்றது.**

2.ஏலத்திற்குரிய பொருட்களின் பட்டியல் மற்றும் பொருட்களை பரிசீலித்தல் என்பன 2026.02.05 ஆந் திகதி வரை அலுவலக நேரத்தில் சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் ( பெறுதல் மற்றும் வழங்கல்), சிரேஷ்ட பிரதி நில அளவையாளர் நாயகம் ( வள முகாமைத்துவம் ) அவர்களின் மேற்பார்வையின் கீழ் முன்னெடுக்க முடியும்.

3. விலைமனுக்களை முன்வைப்பதற்காக உரிய விலை மனு பத்திர விண்ணப்பப்படிவங்களை மீள செலுத்தப்படாத ரூபா ஆயிரம் (ரூ.1000.00) மூலம் செலுத்தப்படுகின்ற கொடுப்பனவின் அடிப்படையில் 2026.02.05 ஆந் திகதி பி.ப. 2,30 வரை இலக்கம் 150, கிருல வீதி, கொழும்பு 05 இல் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்தின் சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் ( பெறுதல் மற்றும் வழங்கல் ) அவர்களிடம் பெற்றுக்கொள்ள முடியும்.

4. ஒவ்வொரு பொருட் தொகுதிக்கும் (Lot) வெவ்வேறாக தயாரிக்கப்பட்ட விலை மனுக்களை கடித உறையில் இட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தொகுதி இலக்கம் " மற்றும் "பாவனையில் இருந்து ஒதுக்கப்பட்ட பொருட்களுக்கான விலைமனு" எனக் குறிப்பிடப்பட்டு 2026.02.06 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய விதத்தில் "சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (பெறுதல் மற்றும் வழங்கல்) நில அளவைத் திணைக்களம், இலக்கம் 150, கிருல வீதி, நாராஹேன்பிட்டி, கொழும்பு 05 " எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இல்லை எனில் பெறுதல் மற்றும் வழங்கல் கிளையில் வைக்கப்பட்டுள்ள விலை மனுக்கோரல் பெட்டியில் இடுதல் வேண்டும். அத்தினத்திலேயே மு.ப. 11.05 இற்கு விலை மனுக்கள் திறக்கப்படுவதுடன் அச்சந்தர்ப்பத்தில் விலை மனுதாரரோ அல்லது அவருடைய பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள முடியும்.

5. தாமதமாகக் கிடைக்கப்பெறுகின்ற அல்லது பூரணப்படுத்தப்படாமல் சமர்ப்பிக்கப்படுகின்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதுடன் பொருட்களை விற்பனை செய்யும் போது முன்வைக்கப்படும் விலை மனுவின் பெறுமதிக்கு மேலதிகமாக அத்தினத்தில் நிலவுகின்ற பெறுமதிசேர் வரியும் கொள்வனவாளரால் செலுத்தப்படல் வேண்டும். இவ் விற்னையுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பாக நில அளவையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானமானது இறுதித் தீர்மானமாக கொள்ளப்படும்.

விற்பனைக்கு முன்மொழியப்பட்டுள்ள பாவனையில் இருந்து ஒதுக்கப்பட்ட பொருட்களின் வகைகள்.-

1) மடிக் கணினிகள் , கணினி மற்றும் கணினி உதிரிப்பாகங்கள்
2) தொலைநகல் மற்றும் அச்சுப் பொறிகள்
3) நில அளவை உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்
4) ஏனைய நீக்க கூடிய பொருட்கள் ( பூட்டுச்சாவி முதலியன)

நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகம்,
இலக்கம் 150, கிருல வீதி,
கொழும்பு 05,
2026.01.09.

தொலைபேசி இல. : **0112368106, 0112369034.**

01- 108

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

**மாவட்ட / நீதிவான் நீதிமன்றம்- கிளிநொச்சி**

**கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்ட உரிமை கோரப்படாத மோட்டார் வாகனங்களை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்**

1. கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்டதும் இதுவரை உரிமை கோரப்படாததுமான மோட்டார் வாகனங்கள் 2026.01.17, 2026.02.27, 2026.02.28 ஆந் திகதிகளில் காலை 9.30 மணிக்கு இந் நீதிமன்ற வளாகத்தினுள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்கப்படும்.

2. ஏல விற்பனைக்கு உட்படுத்தும் பொருட்களை உரிமை கோருபவர்கள் யாராவது இருக்குமிடத்து ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்னர் தமது கோரிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

3. ஏல விற்பனைப் பொருட்களை ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்னர் இம்மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிட முடியும்.

4. ஏல விற்பனைக்கு உட்படுத்தப்படும் பொருட்களுக்கு உரிய கேள்வி இல்லாதவிடத்து, அப்பொருளின் ஏல விற்பனையை மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே கொண்டுள்ளது.

5. ஏல விற்பனையில் விற்கப்பட்ட பொருட்களுக்குரிய பணத்தை உடன் செலுத்தி, பொருட்களை நீதிமன்ற வளாகத்திலிருந்து உடனடியாக அப்புறப்படுத்தல் வேண்டும். கொடுப்பனவுகள் பணமாகவே செலுத்தப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

6. ஏல விற்பனையில் பங்கு பற்றுபவர்கள் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் செல்லுபடியான ஆவணங்களுடன் பிரசன்னமாக இருத்தல் வேண்டும்.

காயத்திரி சைலவன்,
மாவட்ட நீதிபதி/நீதிவான்.

மாவட்ட /நீதிவான் நீதிமன்றம்,
கிளிநொச்சி.

**நீதிவான் நீதிமன்றம்- கிளிநொச்சி**
**பறிமுதல் செய்யப்பட்ட / உரிமை கோரப்படாத மோட்டார் வாகனங்கள்**

| *இல.* | *வழக்கிலக்கம்* | *மோட்டார் சைக்கிள் இலக்கம்* | *மோட்டார் சைக்கிள் வகை* |
|---|---|---|---|
| 01 | B/188/17 | UI 4848 | பஜாஜ் |
| 02 | B/854/17 | 49 - CC | **49** சிசி |
| 03 | B/66/15 | N/A | ரிவிஎஸ் |
| 04 | B/731/18 | N/A | ஹீறோ ஹொண்டா |
| 05 | 33761 | BAQ 2197 | ஹீறோ |
| 06 | 32321 | BEQ 4604 | ஹீறோ |
| 07 | B/83/19 | TD 3426 | ஹீறோ ஹொண்டா |
| 08 | B/1921/19 | BDJ 3184 | ஹீறோ |
| 09 | 63557 | N/A | பஜாஜ் |
| 10 | B/391/13 | 49 - CC | **49** சீசீ |
| 11 | 26028 | BCE 0331 | ஹீறோ |
| 12 | 42262 | MI 4057 | பஜாஜ் |
| 13 | B/781/20 | BIG 4354 | யமகா |
| 14 | B/56/20 | BDK 5953 | ஹீறோ |
| 15 | B/794/17 | 84 - 3632 | யமகா |
| 16 | B/64/19 | 151 8167 | யமகா |

| இல. | வழக்கிலக்கம் | மோட்டார் சைக்கிள் இலக்கம் | மோட்டார் சைக்கிள் வகை |
|---|---|---|---|
| 17 | 49232 | XY 6587 | பஜாஜ் |
| 18 | 47617 | UNREGISTERED | ஹீரோ ஹொண்டா |
| 19 | 20636 | HR 2044 | பஜாஜ் |
| 20 | B/548/17 | BEJ 8283 | யமகா |
| 21 | B/285/12 | XK 0770 | யலிங் |
| 22 | B/156/13 | 49 - CC | 49 சிசி |
| 23 | 32231 | BCN 9377 | ரிவிஎஸ் |
| 24 | B827/14 | XW 8189 | ரிவிஎஸ் |
| 25 | B/476/11<br>B/488/11<br>B/489/11 | WW 5069 | ஹீரோ கொண்டா |
| 26 | B/676/17 | BCM 0812 | யமகா |
| 27 | 18746 | 158 - 6840 | யமகா |
| 28 | B/608/15 | WD 7292 | ஹீரோ ஹொண்டா |
| 29 | B/414/17 | MH 0262 | ஹீரோ ஹொண்டா |
| 30 | B/207/21 | 500 - 3040 | யமகா |
| 31 | B/76/21 | N/A | பஜாஜ் |
| 32 | B/1004/16 | N/A | சிடி டவுண் |
| 33 | B/120/25 | MQ 1963 | பஜாஜ் |
| 34 | B/1473/19 | VL 6506 | ஹீரோ ஹொண்டா |
| 35 | B/1189/25 | HD 6497 | ஹீரோ ஹொண்டா |
| 36 | 25096 | BES 4728 | ஹீரோ |
| 37 | 57523 | WL 4325 | ஹீரோ ஹொண்டா |
| 38 | B/1318/24 | BGG 4339 | பஜாஜ் |
| 39 | B/2278/23 | BAD 5834 | பஜாஜ் |
| 40 | AR/513/18 | WI 8614 | கினிரெக் |
| 41 | B/439/12 | N/A | எம்ரிநைரி |
| 42 | B/387/21 | N/A | ஹொண்டா |
| 43 | AR/02/17 | WM 7367 | பஜாஜ் |
| 44 | 58781 | UG 1074 | ஹீரோ ஹொண்டா |
| 45 | B/11/17 | N/A | ஹீரோ ஹொண்டா |
| 46 | B/43/16 | BCC 8349 | ஹீரோ |
| 47 | B/1268/21 | BFH 7969 | பஜாஜ் |
| 48 | 32242 | GVZ 0925 | பஜாஜ் |
| 49 | 40428 | GQ 2141 | பஜாஜ் |
| 50 | B/876/18 | BEM 5914 | யமகா |
| 51 | B/85/21 | HW 2204 | ஹீரோ ஹொண்டா |
| 52 | B/746/18 | BBS 3043 | ஹீரோ |
| 53 | B/875/20 | VN 7507 | பசன் புறோ |
| 54 | 29914 | VI 2522 | ஹீரோ ஹொண்டா |
| 55 | B/140/12 | JW 8106 | ஹீரோ ஹொண்டா |

| இல. | வழக்கிலக்கம் | மோட்டார் சைக்கிள் இலக்கம் | மோட்டார் சைக்கிள் வகை |
|---|---|---|---|
| 56 | 44342 | BHC 9744 | யமகா |
| 57 | B/1286/21 | 49 - CC | 49 சீசீ |
| 58 | B/361/22 | N/A | கெவி டியூட்டி |
| 59 | 36107 | BGG 5799 | ஹீறோ |
| 60 | B/523/13 | XI 9540 | ஹீறோ ஹொண்டா |
| 61 | AR/513/18 | N/A | ஹீறோ ஹொண்டா |
| 62 | B/506/12 | N/A | டைரோ |
| 63 | B/400/12 | HV 7181 | ஹீறோ ஹொண்டா |
| 64 | B/887 | HQ 7460 | பஜாஜ் |
| 65 | B/245/12<br>B/243/12 | N/A | ஹீறோ ஹொண்டா |
| 66 | B/431/12 | N/A | ஹீறோ ஹொண்டா |
| 67 | 5961 | N/A | சுப்பர் கப் |
| 68 | B/813/14 | WY 6617 | பஜாஜ் |
| 69 | B/2228/23 | UM 7045 | ஏசியா விங் |
| 70 | AR/300/24 | BIC 9983 | ஹீறோ |
| 71 | B/1347/23 | BHN 8650 | ரிவிஎஸ் |
| 72 | AR/2902/23 | BCK 2691 | ஹீறோ |
| 73 | 54909 | VX 6164 | ஹீறோ ஹொண்டா |
| 74 | B/1423/24 | BHS 5442 | பஜாஜ் |
| 75 | B/2667/23 | BET 5724 | ஹொண்டா |
| 76 | B/1848/23 | MP 0122 | சுப்பர் கப் |
| 77 | B/411/13 | HI 3671 | டயங் |
| 78 | B/675/15 | 49 - CC | ஹீறோ |
| 79 | B/1999/19 | BCP 5956 | பஜாஜ் |
| 80 | B/217/13 | N/A | பஜாஜ் |
| 81 | B/1997/19 | WR 8236 | சிடி டவுண் |
| 82 | B/439/12 | 500-9233 | ஹொண்டா |
| 83 | B/876/23 | BAZ 0637 | மகேந்திரா |
| 84 | B/901/18 | XV 6639 | பஜாஜ் |
| 85 | B/775/23 | N/A | யமகா |
| 86 | 43552 | BAH 7363 | பஜாஜ் |
| 87 | AR/4442/25 - 1 | XP 1843 | டைரோ |
| 88 | AR/4442/25 - 2 | 49 - CC | கினிரெக் |
| 89 | AR/4442/25 - 3 | UNREGISTERED | ஹீறோ |
| 90 | AR/4442/25 - 4 | WD 0489 | ஹீறோ ஹொண்டா |
| 91 | AR/4442/25 - 5 | N/A | டியோ |
| 92 | AR/4442/25 - 6 | BDU 7159 | ஹீறோ |
| 93 | AR/4442/25 - 7 | BCS 8360 | பஜாஜ் |
| 94 | AR/4442/25 - 8 | 49 - CC | 49 சிசி |
| 95 | AR/4442/25 - 9 | VX 8852 | ஹீறோ ஹொண்டா |
| 96 | AR/4442/25 - 10 | UB 0541 | ஹீறோ ஹொண்டா |

| இல. | வழக்கிலக்கம் | மோட்டார் சைக்கிள் இலக்கம் | மோட்டார் சைக்கிள் வகை |
|---|---|---|---|
| 97 | AR/4442/25 - 11 | N/A | பிளாற்றினம் 100 |
| 98 | AR/4442/25 - 12 | N/A | எம்ரிநைன்ரி |
| 99 | AR/4442/25 - 13 | 149-3133 | யமகா |
| 100 | AR/4442/25 - 14 | HW 9317 | பஜாஜ் |
| 101 | AR/4442/25 - 15 | N/A | ரிவிஎஸ் |
| 102 | AR/4442/25 - 16 | VP 8859 | ஹீரோ ஹொண்டா |
| 103 | AR/4442/25 - 17 | UZ 0912 | சிக்ரா |
| 104 | AR/4442/25 - 18 | N/A | ஸ்கூட்டி |
| 105 | AR/4442/25 - 19 | 49 - CC | 49 சிசி |
| 106 | AR/4442/25 - 20 | MA 8857 | சிடி டிலாக்ஸ் |
| 107 | AR/4442/25 - 21 | N/A | ஹீரோ ஹொண்டா |
| 108 | AR/4442/25 - 22 | N/A | ஹீரோ ஹொண்டா |
| 109 | AR/4442/25 - 23 | N/A | பிளஸ்சர் |
| 110 | AR/4442/25 - 24 | N/A | ஹீரோ ஹொண்டா |
| 111 | AR/4442/25 - 25 | BJA 6820 | றிமாக் |
| 112 | AR/4442/25 - 26 | UL 0830 | ரிவிஎஸ் |
| 113 | AR/4442/25 - 27 | 49 - CC | 49 சிசி |
| 114 | AR/4442/25 - 28 | N/A | ஹீரோ ஸ்ரீம் |
| 115 | AR/4442/25 - 29 | BBE 9656 | ஹொண்டா |
| 116 | AR/4442/25 - 30 | MO 5680 | பஜாஜ் |
| 117 | AR/4442/25 - 31 | N/A | பிஜி சூம் |
| 118 | AR/4442/25 - 32 | XM 2947 | ஹீரோ ஹொண்டா |
| 119 | AR/4442/25 - 33 | N/A | யமகா |
| 120 | AR/4442/25 - 34 | MA 3395 | ஹீரோ ஹொண்டா |
| 121 | AR/4442/25 - 35 | BEL 6078 | பஜாஜ் |
| 122 | AR/4442/25 - 36 | BD0 9135 | ஹீரோ |
| 123 | AR/4442/25 - 37 | WG 4392 | ஹீரோ ஹொண்டா |
| 124 | AR/4442/25 - 39 | GI 7869 | யமகா |
| 125 | AR/4442/25 - 40 | BGB 3313 | அக்றோ |
| 126 | AR/4442/25 - 41 | TV 8116 | மேற் |
| 127 | AR/4442/25 - 42 | N/A | மேற் |
| 128 | AR/4442/25 - 43 | N/A | ஹொண்டா |
| 129 | AR/4442/25 - 44 | N/A | யமகா |
| 130 | AR/4442/25 - 45 | N/A | சீடி டவுண் |
| 131 | AR/4442/25 - 46 | MF 6818 | ஹீரோ ஹொண்டா |
| 132 | AR/4442/25 - 47 | XM 6924 | ஹீரோ ஹொண்டா |
| 133 | AR/4442/25 - 48 | JU 3278 | ரிவிஎஸ் |
| 134 | AR/4442/25 - 49 | BHO 3969 | யமகா |
| 135 | AR/4442/25 - 50 | JM 3383 | ஹீரோ ஹொண்டா |
| 136 | AR/4442/25 - 51 | N/A | மேற் |
| 137 | AR/4442/25 - 52 | SL 49 | ஸ்னோர் |

| இல. | வழக்கிலக்கம் | மோட்டார் சைக்கிள் இலக்கம் | மோட்டார் சைக்கிள் வகை |
|---|---|---|---|
| 138 | AR/4442/25 - 53 | MA 8847 | ஹீறோ ஹொண்டா |
| 139 | AR/4442/25 - 54 | N/A | ஹொண்டா |
| 140 | AR/4442/25 - 55 | VZ 2133 | ஹீறோ ஹொண்டா |
| 141 | AR/4442/25 - 56 | HT 4456 | ரிவிஎஸ் |
| 142 | AR/4442/25 - 57 | UNREGISTERED | பஜஜ் |
| 143 | AR/4442/25 - 58 | N/A | ஜயலிங் கஸ்ரம் 90 |
| 144 | AR/4442/25 - 59 | N/A | டஜாங் |
| 145 | AR/4442/25 - 60 | MG 9590 | ஹீறோ ஹொண்டா |
| 146 | AR/4442/25 - 61 | N/A | ஹீறோ ஹொண்டா |
| 147 | AR/4442/25 - 62 | N/A | யமகா |
| 148 | AR/4442/25 - 63 | HD 6537 | ஹொண்டா |
| 149 | AR/4442/25 - 64 | HV 97 | ஹீறோ ஹொண்டா |
| 150 | AR/4442/25 - 65 | WI 4775 | ஹீறோ ஹொண்டா |
| 151 | AR/4442/25 - 66 | N/A | ஹீறோ ஹொண்டா |
| 152 | AR/4442/25 - 67 | GG 4338 | சின்ஸ்கி |
| 153 | AR/4442/25 - 68 | N/A | சுப்பர் கப் |
| 154 | AR/4442/25 - 69 | N/A | எம்ரிநைன்ரி |
| 155 | AR/4442/25 - 70 | BED 0653 | பஜாஜ் |
| 156 | AR/4442/25 - 71 | BBA 4558 | பஜாஜ் |
| 157 | AR/4442/25 - 72 | VY 8912 | ஹீறோ ஹொண்டா |
| 158 | AR/4442/25 - 73 | N/A | ஹீறோ ஹொண்டா |
| 159 | AR/4441/25A | N/A | சிறங் |
| 160 | AR/4441/25B | UNREGISTERED | லாண்ட் மாஸ்ரர் |
| 161 | AR/4441/25C | N/A | லாண்ட் மாஸ்ரர் |
| 162 | AR/4441/25E | N/A | ஹஜஸ் |
| 163 | 34982 | QY 3819 | டயுன் |
| 164 | B/872/15 | UNREGISTERED | ரட்டா |
| 165 | 36965 | N/A | லாண்ட் மாஸ்ரர் |
| 166 | B/1385/19 | UNREGISTERED | லாண்ட் மாஸ்ரர் |
| 167 | B/586/20 | N/A | லாண்ட் மாஸ்ரர் |
| 168 | B/79/20 | N/A | சென்ரின் |
| 169 | 7899 | N/A | லாண்ட் மாஸ்ரர் |
| 170 | AR/4441/25-F | 78 - 1049 | லாண்ட் மாஸ்ரர் |

01- 110

# உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள்

### கம்பனி பெயர் மாற்றல் அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி தனது பெயரை (8 ஆம் பிரிவின் பிரகாரம்) 2025, நவெம்பர் 26 ஆந் திகதி முதல் மாற்றியுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

*கம்பனியின் முந்தைய பெயர்:* சீ எச் எச் இன்வெஸ்ட்மென்ட்ஸ் ( பிரைவட்) லிமிட்டட்
*கம்பனியின் இல.:* பீவீ 00213654
*முகவரி:* இல. 327, யூனியன் பிளேஸ், கொழும்பு 02
*தபால் குறியீடு :* 00200
*கம்பனியின் புதிய பெயர்:* பாந்தியேர் ஜுவல்லரி (பிரைவட்) லிமிட்டட்

எஸ் ஜே கோப்பரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 20/A, வல்பொல வீதி,
அக்கோனா, அங்கொடை.

01- 89

---

### கம்பனி பெயர் மாற்றல் அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி தனது பெயரை (8 ஆம் பிரிவின் பிரகாரம்) 2025, நவெம்பர் 15 ஆந் திகதி முதல் மாற்றியுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

*கம்பனியின் முந்தைய பெயர்:* டொம் சேஷாறே (பிரைவட்) லிமிட்டட்
*கம்பனியின் இல.:* பீவீ 19307
*முகவரி:* இல. 704,காலி வீதி, கொழும்பு 03
*தபால் குறியீடு :* 00300
*கம்பனியின் புதிய பெயர்:* பேயாஃபூட் கெலரி (பிரைவட்) லிமிட்டட்

எஸ் ஜே கோப்பரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 20/A, வல்பொல வீதி, அக்கோனா, அங்கொடை.

01- 91

---

### கம்பனி பெயர் மாற்றம் பற்றிய பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் விதிகளுக்கு அமைவாக கீழே குறிப்பிடப்படும் கம்பனி பெயர் மாற்ற அறிவித்தல் இத்தால் விடுக்கப்படுகின்றது.

*கம்பனியின் பழைய பெயர்:* SC செக்குரிடீஸ் (பிரைவட்) லிமிட்டட்
*கம்பனியின் இல.:* PV 4754
*கம்பனியின் பதிவு அலுவலக முகவரி:* இல. 110, சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, கொழும்பு 02
*கம்பனியின் புதிய பெயர்:* சம்பத் செக்குரிட்டீஸ் (பிரைவட்) லிமிட்டட்

PW கோர்பரேட் செக்ரடேரியல் (பிரைவட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

2025, திசெம்பர் 16.

01- 130

---

# ஏல விற்பனைகள்

### இலங்கை வங்கி
### ஏல விற்பனை அறிவித்தல்

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் (397 ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்

இல. 339/ A1/1, நீர்கொழும்பு வீதி,பேலியகொட என்ற பதிவுசெய்யப்பட்ட முகவரியைக் கொண்ட "ஈஸ்ரேண் புரடியூஸ் எக்ஸ்போட்ஸ்" நிறுவனத்தின் கடன் பொறுப்புகளின் பொருட்டு ஈடுவைக்கப்பட்ட வரி மதிப்பீட்டு இல. 15, ஜயா வீதி, பம்பலப்பிட்டி என்ற முகவரியிலுள்ள ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்திற்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2025.09.19 ஆந் திகதிய 2455 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2025.09.16 ஆந் திகதிய தினகரன், தினமின மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு அமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை செலுத்தவேண்டியுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடப்படவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தையும் நிலமனையையும் இல. 6A,ஃபெயாஃபீல்ட் காடின் , கொழும்பு 08 என்னும் முகவரியிலுள்ள ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. N.T.B. டி அல்விஸ் சமரவிக்ரம மற்றும் / அல்லது A.I.L. டி அல்விஸ் சமரவிக்ரமவினால் 2026.02.11 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு இல. 01, இலங்கை வங்கிச் சதுக்கம் , இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு என்ற முகவரியில் அமைந்துள்ள

இலங்கை வங்கித் தலைமையகத்தின் 3 ஆம் மாடியிலுள்ள பெருநிறுவன அறவிடற் பிரிவில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பாரென இத்தால் அறிவிக்கப்படுகிறது. (திரு. சிவபாக்கியம் கந்தையாவுக்குச் சொந்தமான) 309, 489, 740 என்ற இலக்கங்களைக் கொண்ட ஈட்டு முறிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை

உரிமம் பெற்ற நில அளவையாளர் பி. சின்னத்தம்பி தயாரித்த 1995.11.23 ஆம் திகதிய 5283 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 3 என அடையாளப்படுத்தப்பட்டு விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி இல.15, ஜயா வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்துடன் மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலக மற்றும் கொழும்பு நகர சபை எல்லைக்குட்பட்ட மிலாகிரிய கிராம அலுவலர் பிரிவில் உள்ள மிலாகிரிய 39 ஆம் வட்டாரத்தில் ஜயா வீதியில் அமைந்துள்ளது. குறித்த 514 ஆம் இலக்க வரைபடத்திற்கமைய வடக்கில்: ஜயா வீதியையும்; கிழக்கில்: உரிமம் பெற்ற நில அளவையாளர் ஆர். பியசேன பெரேரா தயாரித்த 1951.05.21 ஆம் திகதிய D1 என்ற வரைபடத்தில் உள்ளதும் இல. 11, ஜயா வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்டதுமான காணித்துண்டு 4ஐயும்; தெற்கில்: இல. 16 மற்றும் 18, ஜயா வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட கட்டடங்களையும்; மேற்கில்: D1 என்ற வரைபடத்தில் உள்ளதும் இல. 17 என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்டதுமான காணித்துண்டு 2ஐயும்; எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்துடனும் பதினெட்டுத் தசம் ஆறு ஐந்து பேர்ச் (00ஏ. 00றூ. 18.65பே) பரப்பளவையும் கொண்டுள்ளது.

குறித்த காணித்துண்டானது கீழே விபரிக்கப்பட்டுள்ள காணியின் மீளளவையாகும்.

உரிமம் பெற்ற நில அளவையாளர் ஆர். பியசேன பெரேரா தயாரித்த 1951.05.21 ஆம் திகதிய D1 என்ற வரைபடத்தில் காணித்துண்டு 3 என அடையாளப்படுத்தப்பட்டு விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக் கப்பட்டதுமான காணி இல.15, ஜயா வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்துடன் மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை, பள்ளே பற்று கொழும்பு நகர சபை எல்லைகட்குட்பட்ட மிலாகிரிய பம்பலப்பிட்டியில் உள்ள ஜயா வீதியில் அமைந்துள்ளது. வடக்கில்: ஜயா வீதியையும் ; கிழக்கில்: இல. 11, என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட காணித்துண்டு 4 ஐயும் (ஜயா வீதி) ; தெற்கில்: இல. 16 மற்றும் 18, மிலாகிரிய அவனியு என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட (முன்னர் இலக்கங்கள் 12 மற்றும் 16) கட்டடங்களையும் ;மேற்கில்: இல. 17 என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட காணித்துண்டு 2 ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்துடனும் பத்தொன்பது தசம் ஒன்று இரண்டு பேர்ச் (00ஏ. 00றூ. 19.12பே) பரப்பளவைக் கொண்டுள்ளதோடு கொழும்பு காணிப்பதிவகத்தில் 118/30 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**குறிப்பு:** இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவுக்கமைய 2025.09.16 மற்றும் 2025.10.16 ஆந் திகதி களில் முறையே நாளிதழ்களிலும் அரச வர்த்தமானியிலும் தீர்மான அறிவித்தல் வெளியிடப்பட்டதன் பின்னர் ஈஸ்ரேண் ப்ரொடியூஸ் எக்ஸ்போட்ஸ் 2025.10.16 ஆந் திகதி ரூபா 500,000.00 ( ஐந்து இலட்சம் ரூபா) வைப்பிலிடப்பட்டது.

**பணம் செலுத்தும் முறை**: ஏலத்தில் வெற்றிபெறுபவர் ஏலம் கூறி முடிந்ததும் பின்வரும் தொகையைப் பணமாகச் செலுத்த வேண்டும்.

1. கொள்வனவு விலையிலிருந்து 10% ( பத்து வீதம்) ;
2. பெறுமதி சேர் வரி (VAT) கட்டணங்கள் (பொருத்தமாயின்);
3. விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு 1% (ஒரு வீதம்);
4. ஏலதாரருக்கான தரகுப் பணமாக 2.5 % ( இரண்டு தசம் ஐந்து வீதம்);
5. விற்பனைச் செலவு உட்பட இதர செலவுகள் ஏதும் இருப்பின்;
6. பிற கட்டணங்களும் அறவீடுகளும்.

ஏலம் நடைபெற்ற தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையிலிருந்து இன்னொரு 10% ( பத்து வீதத்தை ) செலுத்த வேண்டும் என்பதோடு விற்பனைத் திகதியிலுருந்து 3 மாதங்களுக்குள் கொள்வனவு விலையின் மீதி 80% ( எண்பது வீதத்தை) செலுத்த வேண்டும். மேலும் விற்பனைச் சான்றிதழை அத்தாட்சிப்படுத்துவதற்கான முத்திரைத் தீர்வை மற்றும் நொத்தாரிசுக் கட்டணம் என்பவற்றையும் கொள்வனவாளர் செலுத்த வேண்டும்.

மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு கொள்வனவாளர் இணங்காதவிடத்து ஏல நாளன்று செலுத்தப்பட்ட அனைத்துப் பணங்களையும் செல்லுபடியற்றதாக அறிவித்து ஆதனத்தை மீண்டும் விற்பனை செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

**ஆதனத்தைச் சென்றடையும் வழி**: பம்பலப்பிட்டி சந்தி யிலிருந்து காலி வீதி வழியாக வெள்ளவத்தை நோக்கி 900 மீற்றர்கள் பயணித்தால் வலது பக்கத்தில் ஜயா வீதியை அடையலாம். பின்னர் ஜயா வீதியில் திரும்பி 50 மீற்றர்கள் சென்றால் இல. 15 என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்துடன் இடது பக்கத்தில் குறித்த ஆதனம் அமைந்துள்ளது.

ஏல விலைகூறுபவர்கள் மேற்குறித்த ஆதனங்கள் தொடர்பான உரித்துறுதியையும் ஏனைய தொடர்புபட்ட ஆவணங்களையும் இல. 01, இலங்கை வங்கிச் சதுக்கம், இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை வங்கித் தலைமையகத்தின் 3ஆம் மாடியில் உள்ள பெருநிறுவன அறவிடற் பிரிவில் பார்வையிட முடியும்.

தொலைபேசி இலக்கம் : 0112386073/ 0112203412.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி,

(திருமதி) டி.கே.எஸ்.என். குணவர்தன,
பிரதான முகாமையாளர்,
(பெருநிறுவன அறவிடற் பிரிவு).

இலங்கை வங்கி,
பெருநிறுவன அறவிடற் பிரிவு,
3 ஆம் தளம்,
இல. 1, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 01.

01- 96

## இலங்கை வங்கி
## ஏல விற்பனை அறிவித்தல்

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் (397 ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்

இல.938, புத்தகாயா மாவத்தை, இரண்டாம் கட்டம், அநுராதபுரம் என்ற பதிவு செய்யப்பட்ட முகவரியைக் கொண்ட ( வியாபாரமம் தற்போது இல. 33/ C 3, புத்தகமுவ வீதி, ராஜகிரிய என்ற முகவரியில் முன்னெடுக்கப்படுகிறது) M/S சீமாசஹித்த ( ஜனதா) ஏக்காபத்த கொவி சமாகமவின் கடன் பொறுப்புகளுக்காக ஈடுவைக்கப்பட்ட இல. 33/ 3C, புத்கமுவ வீதி, ராஜகிரிய என்ற முகவரியில் அமைந்துள்ள ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்திற்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2018.10.19 ஆந் திகதிய 2094 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2018.10.04 ஆந் திகதிய தினகரன், தினமின மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு அமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாகவுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடப்படவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.50/3, விஹார மாவத்தை , கொலன்னாவ, என்ற முகவரியைச் சேர்ந்த, திருவாளர்கள் T&H ஒக்க்ஷன்ஸ் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் 2026.02.18ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளை பல்லேபற்றுவில் கடுவெல பிரதேச செயலாளர் பிரிவில் கடுவல மாநகர சபை எல்லைகளுள் கொடுவேகொட கிராம அலுவலர் பிரிவு இல. 491 B இல் கொடுவேகொடயில் அமைந்ததும் வெலிகட வீதி,வரிமதிப்பு இல. 33/3 ஐக் கொண்ட "தெல்கஹவத்த" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். விக்ரமசிங்ஹ தயாரித்த 2013.08.12 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 7005/ 9000 இல் விபரித்த துண்டு 2A என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில்: வெலிகட வீதி, வரிமதிப்பு இல. 33/C/ 5 ஐக் கொண்ட நிலமனையும்; கிழக்கில்: 4.0 மீ. அகல பாதையும் ( உத்தரவுபெற்ற நில அளவையாளர் சுதர்மன் ஸ்ரீ பால தயாரித்த வரைபட இல. 1627 இல் துண்டு L) உம்; தெற்கில்: 6.0மீ. அகல பாதையும் (வரைபட இல. 1593 இல் துண்டு B2 ) உம்; மேற்கு: வெலிகட வீதி, வரிமதிப்பு இல. 33/C/ 2 ஐக் கொண்ட நிலமனையும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 7005/ 9000 இன் படி பதினான்கு பேர்ச் ( 0ஏ.0றூ.14பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதுமாகும்.

மேற்குறிப்பிட்ட வரைபட இல. 7005/ 9000 இல் மேற்குறிப்பிட்ட காணித்துண்டு பின்வரும் காணியின் ஒரு மீளளவை ஆகும்.

மேற்குறிப்பிட்ட கொடுவேகொடயில் அமைந்த வெலிகடயிலிருந்து புத்கமுவ வரையான பாதைக்கருகில் அமைந்த கீல்ஸ் கிங்ஸ்கேட் வீடுகள், வரிமதிப்பு இல. 33/C/ 3 ஐக் கொண்டதும் 'தெல்கஹவத்த' என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். சிறிபால தயாரித்த 1997.10.20 ஆந் திகதியிட்ட வரைபட இல. 1631 இல் விபரித்த துண்டு 2 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். சிறிபால தயாரித்த வரைபட இல. 1627 இல் துண்டு H உம் ; கிழக்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். சிறிபால தயாரித்த வரைபட இல. 1627 இல் துண்டு L உம் (4 மீ. அகல பாதைக்கான ஒதுக்கம்);தெற்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். சிறிபால தயாரித்த வரைபட இல. 1593 இல் துண்டு B2 உம் ( 6 மீ. அகல பாதை ஒதுக்கம்); மேற்கு: துண்டு 1 எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 1631 இன் படி பதினான்கு பேர்ச் (0ஏ.0றூ.14பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்கள் , கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும்.

இது ஹோமாகம காணிப்பதிவகத்தில் B 304/ 03 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணையில் விபரிக்கப் பட்டுள்ள பாதை ஒதுக்கத்தின் மீதான வழியுரிமையையும் இக்காணி கொண்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட கொடுவேகொடயில் வெலிகடயிலிருந்து புத்கமுவ வரை பாதை நெடுகவும் அமைந்த 'தெல்கஹவத்த' என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். சிறிபால தயாரித்த 1997.08.23 ஆந் திகதியிட்ட வரைபட இல. 1593 இல் விபரித்த துண்டு B2 ( பாதைக்கான ஒதுக்கம் ) என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில்: துண்டு B1 உம் ;கிழக்கில்: துண்டு B1 மற்றும் B3 உம்; தெற்கு: வரைபட இல. 1592இல் துண்டு A உம் ; மேற்கு: வெலிகடயிலிருந்து புத்கமுவ வரை பாதையும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 1593 இன் படி பதினாறு தசம் எட்டு பேர்ச் (0ஏ.0றூ.16.8பே.) விஸ்தீரணமுடையது. இது ஹோமாகம காணிப்பதிவகத்தில் தொகுதி - பக்கம் G 1215/ 237 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட கொடுவேகொடயில் வெலிகடயிலிருந்து புத்கமுவ வரையான பாதைக்கு அருகில் அமைந்த 'தெல்கஹவத்த' என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். சிறிபால தயாரித்த 1997.09.16 ஆந் திகதியிட்ட வரைபட இல. 1627 இல் விபரித்த துண்டு L என அடையாளமிட்ட (பாதைக்கான ஒதுக்கம்) பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில்: துண்டு H உம் ;கிழக்கில்: துண்டுகள் J மற்றும் K என்பனவற்றையும் ;தெற்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். சிறிபால தயாரித்த வரைபட இல. 1593 இல் துண்டு B2 உம் ; மேற்கு: துண்டு G உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 1627 இன் படி நான்கு தசம் எட்டு பேர்ச் (0ஏ.0றூ.4.8பே.) விஸ்தீரணமுடையது. இது ஹோமாகம காணிப்பதிவகத்தில் தொகுதி - பக்கம் G 1222/ 10 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட கொடுவேகொடயில் வெலிகடயிலிருந்து புத்கமுவ வரை பாதைக்கு அருகில் அமைந்த 'தெல்கஹவத்த' என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். சிறிபால தயாரித்த 1997.08.23ஆந் திகதியிட்ட வரைபட இல. 1593 இல் விபரித்த துண்டு B3 என அடையாளமிட்ட (சாக்கடை ஒன்றுக்கான ஒதுக்கம்) பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில்: துண்டு B1 மற்றும் B2 ;கிழக்கில்: UDA இன் பொருப்பன ஆதனம் என அழைக்கும் வயலும்;தெற்கு: வரைபட இல. 1592 இல் துண்டு A உம் ; மேற்கு: துண்டு B2 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 1593 இன் படி பூச்சியம் தசம் ஐந்து பேர்ச் (0ஏ.0று.0.5பே.) விஸ்தீரணமுடையது. இது ஹோமாகம காணிப்பதிவகத்தில் தொகுதி - பக்கம் G 1215/ 238 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**குறிப்பு:** சபையின் தீர்மான அறிவித்தலை இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவுக்கமைய 2018.10.04 ஆந் திகதி வர்த்தமானியிலும் 2018.10.19 ஆந் திகதி நாளிதழ்களிலும் வெளியிட்ட பின்னர் M/S/ சிமாசகித்த ( ஜனதா) ஏக்காபத்த கொவி சங்கம நிறுவனம் 2,025,000 ரூபா தொகையினை வைப்பிலிட்டது அதிலிருந்து 263, 250 ரூபா மறுசீரமைப்புக் கடன் A2 இன் பொருட்டு ஒதுக்கி வைக்கப்பட்டு 2019.01.14 தொடக்கம் 2019.10.30 வரையான காலப்பகுதிக்குள் அவ்வப்போதாக அறவிடப்பட்டதோடு மேற்படி தொகை அந்நிறுவனத்தின் நிலுவையிலுள்ள கடனின் முதல் , வட்டி என்பவற்றின் பொருட்டும் அறவிடப்பட்டது.

**பணம் செலுத்தும் முறை** : ஏலத்தில் வெற்றிபெறுபவர் ஏலம் கூறி முடிந்ததும் பின்வரும் தொகையைப் பணமாகச் செலுத்த வேண்டும்.

1. கொள்வனவு விலையிலிருந்து 10% ( பத்து வீதம்) ;
2. பெறுமதி சேர்வரி(VAT) கட்டணங்கள் (பொருத்தமாயின்);
3. விற்பனை வரியாக உள்ளூர் அதிகாரிரி சபைக்கு 1% (ஒரு வீதம்);
